பத்தி

ஒளிக் கவிதைகள்

கோலாலம்பூர்ல நடந்த சீ விளையாட்டுப் போட்டியை என்னால மறக்க முடியாது. புகைப்படப் போட்டியில முதல் பரிசு வெவ்வது எனக்குப் புதுசு இல்ல. இதுவரைக்கும் நெறைய பரிசுகள் வாங்கியிருக்கேன். ஆனா கோலாலம்பூர்ல நடைப்பெற்ற 'சீ' போட்டியில முதல் பரிசை வென்றதை ஏன் முக்கியமா சொல்றேன்னா அதுல கொஞ்சம் ஆச்சரியமும் அளவில்லாத மகிழ்ச்சியும் கலந்திருக்கு.

ஒரு படம் பிடிக்குறோம்னு சொன்னா நமக்கு ரொம்ப பொறுமை வேணும். பொறுமையோடு சேர்ந்து அதிர்ஷ்டமும் வேணும். காரணம் எப்ப என்ன நடக்கும்னு நமக்குத் தெரியாது. அந்த அதிர்ஷ்டத்தை தேடி நான் போய்கிட்டு இருந்திருக்கேனு நெனைக்கிறேன். அதே சமயம் அதிர்ஷ்டமும் என்னைத் தேடி வந்துக்கிட்டு இருந்திருக்கு.

நான் பரிசு வாங்குன படத்தைப் பற்றி சொல்லனும்னா நீரில் முங்கும் போட்டி அதாவது டைவிங் (diving). இந்தியர்கள் அதிகமா பங்கு எடுத்துக் கொள்ளாத போட்டி இது. எனக்கு டைவிங் ஏன் பிடிக்கும்னு சொன்னா.. அவங்களோட ஆக்ஷன் ரொம்ப நல்லா இருக்கும். அதுவும் ரெண்டு பேரு சேர்ந்து பாயுரது இன்னும் அழகா இருக்கும். அந்தக் காட்சியைப் படமாக்கும்போது இன்னும் அழகா வரும். அன்றைக்குக் காலையிலேயே நான் எழுந்திருச்சுப் போகணும். காலையில ஏழு மணிக்கு விளையாட்டு ஆரம்பிச்சிடுவாங்க. நான் ஏழு மணிக்குப் போகணும்ங்குற அவசியம் இல்லை. பத்து மணிக்குமேல நான் போனாக்கூட போதும். நான் டிவியைத் திறந்து அந்த விளையாட்டுப் போட்டியைப் பார்த்துகிட்டு இருந்தேன். தொலைக்காட்சியில பார்க்கும்போது கதில் பதிவாகும் காட்சிகள் ரொம்ப அழகா இருந்தது. அந்தத் தொலைக்காட்சி, காட்சியைப் பதிவாக்கும் கோணத்துல இருந்தே நாமலும் கேமராவுக்குள்ள படங்களைக் கொண்டு வந்தா என்னன்னு எனக்குத் தோணுச்சு. எப்பவுமே டிவிங்கிறது வேற கேமராங்குறது வேற.. இந்த எண்ணத்தோட நான் சீக்கிரமா குளிச்சிட்டு அந்தப் போட்டி நடக்குற இடத்துக்குப் போனேன்.

அங்க போனதும் முதல் வேலையா அந்த டிவி கேமரா கோணம் எப்படி.. எங்க இருக்குன்னு தேடினேன். ஒருவழியா எந்த டிவி கேமரா எங்க இருக்குன்னு கண்டுபிடிச்சுட்டேன். அந்தக் கேமராவுக்குப் பின்னால இருந்து நான் படம் பிடிக்கத் தொடங்கினேன். அந்தக் கோணத்துல இருந்து பார்க்கும்போது அவங்க குதிக்கிற அந்தக் காட்சி இருட்டா இருக்கும். காரணம் எப்பவுமே லைட்டிங் குறைவா இருந்தா காட்சி இருளாதான் இருக்கும். அதேவேளை பின்னாடி வெளிச்சமா இருந்தா காட்சி இருட்டா இருக்கும். அதனால நான் ரொம்ப கவனமா டிவியில பார்த்த மாதிரியே அந்தக் காட்சியைப் பதிவு செஞ்சேன். எப்பவுமே டிவியில எடுக்குறது வேற. அதை அப்படியே கேமராவுக்குள்ள கொண்டு வர்றது சுலபம் இல்ல. அன்றைக்குக் காலையில எட்டரை மணியில இருந்து சாயந்திரம் நாலரை மணி வரைக்கும் அங்கேயே இருக்க வேண்டிய சூழ்நிலை எனக்கு. அந்த இடைப்பட்ட நேரத்துல எனக்குப் பிடிச்ச வகையில நூற்றுக்கும் அதிகமான படங்களைப்பிடிச்சேன். நூற்றுக்கும் அதிகமான படங்கள்ல ஒரு படம்தான் போட்டிக்கு நான் அனுப்புனது. இன்னொரு விஷேசம் என்னன்னா அந்தப் படத்துல இருந்தவங்கதான் அன்றைக்கு அந்தப் போட்டியில ஜெயிச்சாங்க.

இன்னொரு சம்பவம் சொல்லணும்... பொதுவா புகைப்பட போட்டின்னா நாம எத்தனை படம் வேண்டுமானாலும் அனுப்பி வைக்கலாம் ஆனா ஒரே ஒரு படம்தான் சிறந்த படமா தேர்ந்தெடுக்கப்படும். அந்த வகையில நான் வெவ்வேறு போட்டியில் இருந்து ஆறு படம் அனுப்பியிருந்தேன். இந்தப் படம் நிச்சயம் வெற்றி பெறுங்குற நம்பிக்கை எனக்கு இருந்தது. அந்தப் போட்டியோட நீதிபதியாக இருந்தவரு புகைப்படத்துறையில திறமைமிக்கவர். நுணுக்கமானவர். அனுபவமிக்கவர். அதே வேளையில புகைப்பட துறையில மிகவும் தேர்ச்சிப் பெற்றவர். அவர் பேசுகையில் முதல் பரிசை வென்றவர்தான் சட்டப் பிரகாரம் ஆறு பரிசையும் வென்றிருக்கணும்னும் ஒன்னுல இருந்து ஆறு வரைக்கும் அவருக்குதான் நான் பரிசு கொடுத்திருக்கணும்னு சொன்னப்பப் போட்டியில் கலந்திருந்த அத்தனை பேருக்கும் அதிசயமாவும் ஆச்சரியமாவும் இருந்துச்சு. ஆனா அந்த நிமிஷம் வரைக்கும் நான்தான் முதல் வெற்றியாளர்னு எனக்குத் தெரியாது. நிகழ்வு முடிந்ததும் நானே அவர்கிட்ட போயி, ஏன் அப்படி சொன்னீங்கன்னு காரணம் கேட்டேன்.

" நான் முன்னபின்ன உங்களைப் பார்த்தது கிடையாது. ஆனா உண்மையிலேயே உங்களோடப் படங்கள் ஒவ்வொன்னும் அவ்வளவு அழகா இருந்தது. பரிசு பெற்ற படத்தைத் தவிர்த்து மற்ற ஐந்து படங்களும் ரொம்ப பிரமாதமா இருந்தது. உண்மையிலேயே ஒருத்தர் எத்தனைப் பரிசு வேணும்னாலும் ஜெயிக்கலாம்னு சொல்லியிருந்தா கண்டிப்பா ஆறு பரிசையும் உங்களுக்குத்தான் கொடுத்திருப்பேன்னு

அவர் சொன்னப்ப, எனக்கு ரொம்ப சந்தோஷமா இருந்தது. அவர் அப்படிச் சொன்னதை அப்படியே தொலைக்காட்சியிலும் ஒலிபரப்புனாங்க. அதைப் பார்த்துட்டு நெறைய பேரு என்கிட்ட மற்ற படங்களைப் பற்றி கேட்டாங்க. அது உண்மையிலேயே என்னால மறக்க முடியாத ஒரு விஷயம்.

அந்த மாதிரி சிறந்த படங்களை எடுக்க நான் எடுத்துக் கொண்ட சிரமம், நேரம் எனக்குப் பரிசை வாங்கிக் கொடுத்ததுன்னு சொல்லலாம். உண்மையில அந்தப் படங்கள் எல்லாம் சிறந்த படங்கள்னு நான் சொல்றதைவிட புகைப்படத்துறையில நுணுக்கமான இன்னொருத்தர் சொல்லும்போது எனக்கு உண்மையிலேயே மகிழ்ச்சியா இருந்தது.

புகைப்பட போட்டிகளுக்கு அனுப்புற மாதிரி படங்கள் எடுக்கணுங்குற எண்ணம் எப்பவுமே மனசுல இருக்கும். அதனால எப்பவுமே எதார்த்தமா படம் பிடிச்சிட்டு வர முடியாது. நான் நெனைக்குறேன்...ஒவ்வொரு புகைப்படக் கலைஞருக்கும் இந்த எண்ணம் கண்டிப்பா இருக்கும். ஆனா சரியான நேரத்துல சரியான படமாகவும் அது அமையணும். அந்த வகையில் பார்க்கும் போது ஒரு படம் பிடிக்க ஒரு வாரம்கூட காத்திருக்க வேண்டியிருக்கும்.. ஒரு மாசம்கூட காத்திருக்க வேண்டி இருக்கலாம். சிலருக்கு ஒரு நிமிஷத்துல கூட படம் எதிர்பார்த்த மாதிரி அமைஞ்சிடலாம். அந்த வகையில விளையாட்டுத்துறையைப் பொருத்த வரைக்கும் பல படங்கள் எனக்கு சிறப்பா கிடைச்சிருக்கு. அந்த வகையில ஒரு சம்பவத்தை நான் சொல்லலாம்.

ஓட்டப்பந்தயத்துறையில மிகச் சிறந்த பெண்மணி, அவர் பிலிப்பினோ நாட்டைச் சேர்ந்தவரு.ஓட்டப்பந்தயத்தை முடிக்கும்போது அவர்னால ஓட முடியல. நடந்து வரக்கூடிய ஒரு சூழ்நிலையில அவர் கூட வந்தவங்களும் நடந்துதான் வந்தாங்க. அவங்க அப்படி நடந்து வரும்போது மழை தூறல் போட ஆரம்பிச்சது. அந்த மாதிரி மழை தூறல் போடும்போது நாம ஏன் நனைஞ்சுக்கிட்டு படம் எடுக்கணும்னு நெறைய பேரு நெனைப்பாங்க. ஆனா நான் அதையெல்லாம் பொருட்படுத்தாம மழையிலேயே குடையைப் பிடிச்சிகிட்டு படம் எடுத்தேன். அந்தப் பெண்மணி நடந்து வர்றது அழகாக இருந்தது. அவங்க முடி இந்தப் பக்கமும் அந்தப் பக்கமும் அசைஞ்சுகிட்டு இருந்தது. அதே மாதிரி அவங்க கையும் வேகமா முன்னும் பின்னுமா போய்கிட்டு இருந்துச்சு. அவங்க பின்னாடி வந்தவங்க ஒரு தருணத்துல மிகச்சரியா அவங்கள கடந்து போகத் தொடங்கினாங்க. அந்தக் காட்சி ஒரு பெண்மணி, இரண்டு கைகள் முன்னாலும்.. பின்னால் இரண்டு கைகளும் வீசி நடப்பது போல காட்டியது. நடப்பதுது ஒரு ஆளு, ஆனா நாலு கைகள். பக்கத்தில் இருந்தவங்களை இந்தப் பெண்மணி முழுமையா மறைச்சிருந்தாங்க.பக்கத்துப் பெண்ணின் கைகள் மட்டும் தெரிஞ்சதுனால அந்தப் படம் அவ்வளவு அருமையா அமைஞ்சிருந்தது.

பொதுவாகவே புகைப்படக்காரர்களுக்கு சிறந்த படங்கள் பிடிக்க ஆவல் இருக்கும். அதுவும் அவங்களுக்கு ஏற்ற வகையில பிடிக்கணும்னா அதுக்கு ஏற்ற நாடா இந்தியாவைச் சொல்லலாம். இந்தியாவுல எந்த பகுதிக்குப் போனாலும் எந்தக் காட்சியா இருந்தாலும் ஒரு வகையில அழகா இருக்கும். அழகா இல்லாம இருக்குறதும் ஒரு அழகான காட்சிதான். அழகும் சரி, அழுக்கும் சரி, அவஸ்தையும் சரி எல்லாமே குவிந்து கிடக்கும் ஒரு நாடு இந்தியா. அதுவும் தமிழ்நாட்டைச் சொல்லவே தேவையில்லை.

ஸ்பேய்ன் நாட்டுல மாட்டை அடக்குறதை வீர விளையாட்டா நடத்துறாங்க. மாடு மேலே ஏறி உட்கார்ந்துக்கிட்டு அது குதிக்கும் போதும் விழாம உட்கார்ந்துட்டு அதை கட்டுப்படுத்துறாங்களோ அவங்களை வெற்றி பெற்றவங்களா தேர்ந்தெடுப்பாங்க. கொஞ்சம் ஏமாந்து கீழே விழுந்தாலும் மாடு மிதிச்சிரும். ஆனா நெறைய பேரு அந்த விளையாட்டுக்குப் பின்னால இருக்குற அவஸ்தைகள் எல்லாம் தெரிஞ்சும் தெரியாதது போல நடந்துக்கிட்டு இருக்காங்க. இந்த விளையாட்டுனால பலரை இழந்தும் இருக்குறாங்க. அந்த வகையில நான் நேரடியா பார்த்த சில விஷயங்கள் என்னை ஆச்சரியப்பட வைச்சது.

ஒரு வருசம் பொங்கலுக்கு நான் தமிழ்நாட்டிற்குப் போயிருந்தேன். அப்ப திருச்சியில மஞ்சு விரட்டு நடந்தது. பத்திரிகையில இருந்து வந்திருக்கேனு தெரிஞ்சதும் படம் பிடிக்குறதுக்கு ஏற்ற இடம் கொடுத்து சில சலுகைகளை செஞ்சு கொடுத்தாங்க.

மாட்டுக்குச் சொந்தக்காரர் மாட்டை அழகுப்படுத்திக் கூட்டிக்கிட்டு வருவாரு, அதே வேளையில மாட்டைப் பிடிக்குறவங்க ஒருத்தர் ரெண்டு பேரு இல்ல... நூறு இருநூறு பேருனு வரிசைப் பிடிச்சிக்கிட்டு நிற்பாங்க. கூட்டத்துல மாட்டை விடும்போது, அந்த மாடு எல்லாரையும் முட்டி மோதி ஒரு மூலையில இருந்து இன்னொரு மூலைக்கு வந்து சேர முடியாத அளவுக்கு அதைப் கட்டுப்படுத்துவாங்க. அந்த இடைப்பட்ட நேரத்துல மாடு மனிதர்களை முட்டித் தள்ளுறதைப் பார்க்குறதுக்கு ரொம்ப பயங்கரமான காட்சியா இருக்கும். இந்த விளையாட்டப் பத்தி எங்கிட்ட பக்கத்துல இருந்த ஒருத்தர் ரொம்ப சுவாரசியமா பேசிகிட்டு இருந்தாரு. நிரைய விளக்கங்கள்

கொடுத்தாரு. கொஞ்ச நேரத்துல நல்ல நண்பரா ஆயிட்டாரு. திடீருனு தானும் காளைய அடக்கப் போறதா களத்துல குதிச்சாரு. இதை நான் கொஞ்சமும் எதிர்பார்க்காம ஆச்சரியத்துல இருந்தப்ப நெறைய பேரை கொம்புல குத்தி, சிதைச்சி சீறி வந்த காளை அந்த நண்பரையும் கொம்பால குத்தி கொன்றது.அத்தனையும் என் கேமராவுக்குள்ள படமாக்கப்பட்டதுன்னுதான் சொல்லணும். அந்தப் படங்களை இப்ப பார்க்கும்போதுகூட எனக்கு வேதனையா இருக்கும்.

பொங்கலுக்கு நடக்குற ஒரு போட்டியில இவங்க ஏன் தங்களையே மாய்ச்சுக்குறாங்கனு எனக்குத் தோணும். மாடு முட்டி, குடல் வெளியே வந்து, அவங்களைத் தூக்கிக்கிட்டு ஓடி, குடும்பத்தைச் சேர்ந்தவங்க, நண்பர்கள் எல்லாரும் அழுது புரண்டது இதெல்லாம் என்னால மறக்க முடியாத காட்சிகள். இந்த காட்சிகளை படம் எடுக்கும்போது என் மனசுல உருப்படாத ஒரு விசயத்தை செஞ்சுக்கிட்டு இருக்குறாங்களேனு தோணுச்சு. ஆனால், என்ன செய்ய முடியும்...இதுதான் வீரவிளையாட்டாக எண்ணி அரசாங்கமும் அங்கீகாரம் வழங்கி வருகிறது.

‘ஸ்டார்’ கணேசன்